பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 07 வியாழக்கிழமை 23.09.2021 கதிர் 186

## வவுனியாவில் மேலும் மரணம்

வவுனியா மாவட்டத்தில் மேலும் 94 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், 2 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட ☞2

### தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில்

# பொலிஸ் அராஜகம்; கஜேந்திரன் கைது

### மூன்று மணி நேர விசாரணையின் பின்னர் பிணையில் விடுவிப்பு; 27ஆம் திகதி வழக்கு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்த முற்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட மூவர் இன்று பிற்பகல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். ☞2





## திலீபனின் நினைவேந்தலுக்கு நாளை முதல் நீதிமன்றம் தடை

### யாழ். நீதிமன்றம் உத்தரவு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு நாளை முதல் தடை உத்தரவுவழங்கி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இன்று பிற்பகல் இந்தத் தடை உத்தரவு பொலிஸாரால் பெறப்பட்டுள்ளது.

யாழ்., நல்லூரில் ☞2



## கூட்டமைப்பினர் கடும் கண்டனம்

(ந.லோகதயாளன்)

யாழ்., நல்லூரில் தியாக தீபம் திலீபனை நினைவேந்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ☞2

### பொலிஸார் ஆட்பேசபனை தெரிவிக்காததால்

## வன்முறைக் கும்பலைச் சேர்ந்த மூவர் பிணையில் விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவிலில் இடம்பெற்ற வன்முறையில் ஒருவருக்கு கை துண்டாடப்பட்டும் மேலும் 6 பேர் படுகாயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்த ☞2

## விசேட தொலைபேசி இலக்கம்

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு, மருத்துவ ஆலோசனை தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ள விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, எந்த நேரத்திலும் 247 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து மருத்துவர் ஒருவரை தொடர்பு கொள்ளலாம் என கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ ☞2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 489 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 489 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்போது 29 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் ☞2

## பாடசாலை எப்போது திறக்கப்படும்? நாளை வெளியாகவுள்ள அறிவிப்பு

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டிருக்கின்ற பாடசாலைகளை மீளத்திறப்பது குறித்த அறிவிப்பு நாளை வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ☞2

RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir

வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில்
காலைக்கதிர் பத்திரிகையில்
RADIANT DAWN
A Sunday Supplement பக்கத்திற்கு தங்கள்
பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை
கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வைக்கவும், மறக்காமல்
மாணவர்களின் முழுப் பெயர், பாடசாலை, தரம், தொடர்பு
இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com
076 443 8622

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை இரு வாரங்களில் வெளியிட எதிர்பார்ப்பு



ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் இரண்டு வாரங்களில் வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளைத்தயாரிக்கும் பணிகள் இன்னும் சில தினங்களில் நிறைவடையவுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

குறித்த பரீட்சைக்கு 6 லட்சத்து 22 ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். நடனம், சங்கீதம் உள்ளிட்ட செய்முறை பாடங்கள் இடம்பெறாத காரணத்தால் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வன்முறைக்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று சந்தேக நபர்கள்மூவரும்முற்படுத்தப்பட்டபோது, கோப்பாய் பொலிஸார் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத நிலையில் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டது.

கோண்டாவிலில் வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த 7 பேரை கூரிய ஆயுதங்களினால் தாக்கிப் படுகாயம் விளைவித்தும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை தாக்கிச் சேதப்படுத்தியும் தீவைத்தும் வன்முறையில் ஈடுபட்டதாக கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பி அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப்பொலிஸாரினால்கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் கடந்த ஜூலை 5ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள்விளக்கமறியலில்வைக்கப்பட்டமையுடன்அடையாளஅணிவகுப்புக்குட்படுத்த மன்று உத்தரவிட்டிருந்தது. எனினும், நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோய்ப்பரவல் காரணமாக சந்தேகநபர்கள் நால்வரும் ஒகஸ்ட் 19ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய 3 சந்தேகநபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

சந்தேகநபர்கள்மூவரைபிணையில் விடுவிக்கஅவர்களதுசட்டத்தரணிபிணை விண்ணப்பத்தைமன்றில்முன்வைத்தார்.

பிணை விண்ணப்பத்துக்கு மன்றில் தோன்றியிருந்த கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

அதனால் சந்தேகநபர்கள் மூவரையும் தலா 5 லட்சம் ரூபா 2 ஆள் பிணையில்விடுவிக்கநீதிமன்றம்உத்தரவிட்டது.

அதனால் முக்கிய சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தும் செயல்முறையும் இல்லாமல் போயுள்ளது.

## பொலிஸ்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட மூவரும் மூன்றுநேர விசாரணையின் பின்னர் வாக்குமூலங்கள் பெறப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது எனப் பொலிஸார் அறிவித்தனர்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு நடத்தும் நபர்களைக் கைதுசெய்யும் நோக்குடன் இன்று காலை முதல் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் இரு உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் இன்று பிற்பகல் சுடரேற்றி அஞ்சலி செலுத்தச் சென்றபோது அதற்குப் பொலிஸார் தடை விதித்தனர்.

நீதிமன்றத்தின் தடை உத்தரவு இன்றி என்னைத் தடுக்க முடியாது எனக் கூறி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தடைகளை மீறி அஞ்சலி செலுத்த முற்பட்ட வேளை அவரையும் அவருடன் சென்றவர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்ட பின்னரே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## பாடசாலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அவதானம் செலுத்தியுள்ளதோடு, நாளை பாடசாலைகளை மீளத் திறப்பது பற்றிய தெளிவுபடுத்தல்கள் இடம்பெறவுள்ளன என அறியமுடிகின்றது.

எவ்வாறாயினும் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளை கட்டம் கட்டமாகத் திறப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான பரிந்துரையும் வழிகாட்டலும் அடங்கிய அறிக்கை கடந்த வாரம் கல்வி அமைச்சிடம் சுகாதார அமைச்சு கையளித்திருந்தது.

இந்தநிலையில், நாளை கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் பாடசாலைகள் திறக்கப்படும் தினம் தொடர்பான அறிவிப்பு வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தனிமைப்படுத்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வெளியேறும் பிரதேசங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல்சட்டவிதிமுறைகளைமீறிப்பயணித்த 174 வாகனங்களில் வந்த 334 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கூட்டமைப்பினர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நினைவேந்தலைத் தடை செய்ய முடியாது. அதேபோன்று நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தினூடாகத்தடைகளும் விதிக்க முடியாது.

எந்தவொரு அத்துமீறலும் இன்றி, மக்கள் கூட்டம் இன்றி, கொரோனா பாதுகாப்பு மீறல் இன்றி ஓர் மக்கள் பிரதிநிதி மேற்கொண்ட நினைவேந்தலை பொலிஸார் கையாண்ட விதம் மிகவும் பாரதூரமானது.

கஜேந்திரன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் ஒரு சாதாரண மனிதனுக்கு வழங்க வேண்டிய கௌரவத்தையேனும் வழங்காது அவரை இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றி குற்றவாளியைக் கொண்டு செல்வது போன்று பொலிஸார் கொண்டு சென்றனர்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது - என்றார்.

## வவுனியாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 94 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் மேலும் 2 பேர் மரணமடைந்துள்ளனர்.

சாந்தசோலைப் பகுதியில் பெண் ஒருவரும் (வயது 58), தவசிகுளம் பகுதியில் பெண் ஒருவரும் இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## திலீபனின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியுள்ள 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதித்து உத்தரவிடுமாறு யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரினால் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் திலீபனை நினைவுகூரும் நிகழ்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது எனவும், நாட்டில் நிலவும்கொரோனா பரவல் காரணமாக நடைமுறையில் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைய நிகழ்வை நடத்த முடியாத காரணத்தால் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதிக்க வேண்டும் எனவும் பொலிஸாரால் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தடைக் கட்டளை வழங்கியது.

எனினும், நாளை முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள இந்தத் தடைக் கட்டளையில் எவரது பெயரும் குறிப்பிடப்படவில்லை.

## சாதாரண.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை பெறுபேறுகள் வெளியிடாமல் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில, செய்முறை பரீட்சைப் பெறுபேறுகளை தவிர்த்து ஏனைய 8 பாடங்களுக்கான பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் சமீபத்தில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது எனவும்பரீட்சைகள்திணைக்களஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்ட போதிலும் பெரும்பாலான மாணவர்கள் தற்போது இணையவழி ஊடாக உயர்தர வகுப்புக்களின் பாடங்களைக் கற்று வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## விசேட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடத்தின் பேராசிரியர் இந்திக கருணாதிலக தெரிவித்தார்.

அரசதகவல் திணைக்களத்தில் நடைபெற்றஊடகவியலாளர்சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மருத்துவரை தொடர்புகொண்டதன் பின்னர், நோயாளியின் நோய் நிலைக்கு ஏற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 076 740 3814



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நியூயோர்க் வாய்ப்பந்தல்

**நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றியபோது ஒரு விடயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். நீடித்த சமாதானத்தை நாட்டுக்குள் உருவாக்குவதற்கு உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாக பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்று அங்கு அவர் தத்துவம் பேசி இருக்கின்றார். அதாவது பொறுப்புக்கூறல், நீதியை நிலைநாட்டுதல், அவற்றினூடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவை மூலமே நீடித்த சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதை குறைந்தபட்சம் பேச்சளவிலாவது அவர் ஒப்புக் கொண்டு இருக்கின்றார் என்பதுதான் உண்மை.**

**அடக்குமுறை மூலம் சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, நசித்து அவர்களின் இருப்பையே இல்லாமலாக்குவதன் மூலம் இலங்கையில் அடக்குமுறை ரீதியிலான அமைதி ஒன்றை நிலைநாட்டி, ஆயுதமுனையில் சமாதானத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் நாடு சகஜ நிலையில் இருப்பதாகக் காட்டுவதே உண்மையில் அவர் முன்னெடுக்கும் ஒரே நடவடிக்கை திட்டம். என்றாலும், உண்மையான, நீடித்த சமாதானமும் அமைதியும் ஏற்பட பொறுப்புக்கூறல், நீதியை நிலைநாட்டல், அவற்றின் மீது கட்டப்படும் நல்லிணக்கம் ஆகியவையே அவசியம் என்ற யதார்த்தத்தை சர்வதேச மன்றத்திலாவது தாமாக அவர் ஒப்புக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த விடயங்கள் உள்ளூர் நிறுவனங்களின் ஊடாக –தமது அடக்குமுறை நடவடிக்கைகளுக்கான கருவிகள் வாயிலாக – முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அவரது கூற்றில்தான் அவரது உண்மையான கருத்தியல் – யதார்த்த முகம் – புதைந்து கிடக்கின்றது. இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது பல்லாயிரம் பேர் கொன்றொழிக்கப்பட்டனர். பல்லாயிரம் பேர் காணாமலாக்கப்பட்டனர். பல்லாயிரம் பேர் அங்கவீனர்களாக்கப்பட்டனர் அல்லது காயப்படுத்தப்பட்டனர். பெரும்தொகையான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்களும், அடிப்படை உரிமை மீறல்கள் மோசமாகவும் தாராளமாகவும் இடம்பெற்றன.**

**நியாயமான பொறுப்புக்கூறல் என்பது இவை பற்றி நீதி முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, அம்பலப்பட்டு, குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான். அந்த நடைமுறை உள்நாட்டு நிறுவனங்கள் மூலமோ, வெளிநாட்டுப் பங்களிப்புடனான கட்டமைப்புகள் மூலமாகவோ எப்படி முன்னெடுக்கப்பட்டாலும் அந்த நடைமுறை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இருப்பதுதான் முக்கியம். மிக மிக முக்கியம்.**

**கோட்டாபய ராஜபக்ஷ என்ற பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியும், மேலாண்மைத் திமிரும் கொண்ட தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ள உள்நாட்டு கட்டமைப்புகள் அல்லது நிறுவனங்கள் என்பன போர்க்குற்ற அட்டூழியம் புரிந்த அரச ஆயுதப்படைகளையும் அதிகாரிகளையும் விசாரிக்கவே கூடாது, விசாரிக்கவே முடியாது என்ற ஒற்றை நிபந்தனையைக் கட்டாய அடிப்படையாகக் கொண்டவை என்பதால் அவற்றின் மூலம் நீதியும் நிலைநாட்டப்பட மாட்டாது; உண்மையும் கண்டு பிடிக்கப்பட மாட்டாது; நடந்தவையும் அம்பலப்படுத்தப்பட மாட்டாது; மொத்தத்தில் பொறுப்புக்கூறலும் உறுதிப்படுத்தப்பட மாட்டாது.**

**ஐ.நா. பொதுச் சபையில் பொறுப்புக்கூறல், நீதியை நிலைநாட்டல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், நீடித்த சமாதானத்தை உருவாக்குதல் என்றெல்லாம் இலங்கைத் தலைவர் பேசியமை வெறும் வாய்ப்பந்தல்தான். அவரது எதேச்சாதிகார கொடூர ஆட்சியில் மேற்படி விடயங்கள் எல்லாம் சாத்தியமே அல்ல என்பதுதான் வெளிப்படையான கள யதார்த்தமாகும்.**

# சமையல் எரிவாயு விலைகளை அதிகரிக்கும் தீர்மானம் இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

எனினும் உலக சந்தையில் விலை அதிகரிப்பு மற்றும் டொலர் பெறுமதி அதிகரிப்பு என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு சில தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை இணையவழியூடாக நடைபெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் –

கடந்த சில தினங்களாக உலக சந்தையில் ஏற்பட்ட நிலைமையால் குறித்தவொரு நிறுவனம் சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அனுமதிகோரியது. எனினும் அரசாங்கம் அதற்கு அனுமதிக்காமையால் நுகர்வோர் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் விலை மற்றும் விநியோகம் உள்ளிட்ட விடயங்கள், டொலரின் பெறுமதி அதிகரிப்பு உள்ளிட்டவற்றைக் கவனத்தில் கொண்டு எதிர்வரும்காலங்களில்ஏதேனும் தீர்மானங்கள் எடுக்கப்படும்.

எவ்வாறிருப்பினும் தற்போது சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

விநியோகிப்பவர்கள் உரிய விலையில் உரியவாறு விநியோகிக்க நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் நுகர்வோர் நெருக்கடிகளுக்கு உள்ளாவர். எனவே இந்த இரு விடயங்களையும் கவனத்திற்கொண்டு அரசாங்கம் நடுநிலையானதொரு தீர்மானத்தை எடுப்பதற்கு முயற்சிக்கிறது. – என்றார்.

# நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றம்

*நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை திருத்தச் சட்டமூலம் நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.*

*இந்தத் திருத்தச் சட்டமூலம் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஓகஸ்ட் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.*

*அதற்கமைய, நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை திருத்தச் சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காக நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.*

*இந்த நிலையிலேயே நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*அதற்கமைய நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் விதிக்கப்பட்டுள்ள நிர்ணய விலையினை மீறுகின்ற வர்த்தகர் மற்றும் நிறுவனங்களுக்காக அறவிடப்படும் அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கமைய, தனிநபர் வியாபாரங்களுக்காக விதிக்கப்பட்ட ஆயிரம் ரூபா அபராதம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், ஒரு லட்சம் ரூபா அபராதம் ஐந்து லட்சமாக அதிகரிக்கப்பட்டுளளது. அவர்கள் இரண்டாவது தடவையாகவும் அதிகூடிய விலைக்கு பொருள்களை விற்பனைசெய்யும் பட்சத்தில் 2 ஆயிரம் ரூபா தண்டப்பணத்துக்காக 20 ஆயிரம் ரூபாவும் 2 இலட்சம் ரூபாவுக்கு 10 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்படவுள்ளது.*

*நிறுவனம் ஒன்றில் குறித்த தவறு இழைக்கப்படும் பட்சத்தில் 10 ஆயிரம் ரூபா என்ற தண்டப்பணம் ஒரு லட்சம் ரூபாவாகவும் ஐந்து லட்சமாக நிலவிய அபராதம் 50 லட்சம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

# 2 லட்சத்து 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நேற்று புதன்கிழமை தடுப்பூசி செலுத்தப்பட்டது

இலங்கையில் நேற்றைய தினம் 2 லட்சத்து 28 ஆயிரத்து 645 பேருக்கு கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 777 பேருக்கும் கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 33 ஆயிரத்து 462 பேருக்கும் நேற்று செலுத்தப்பட்டது.

அதேபோல சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 165 பேருக்கும் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 31 ஆயிரத்து 931 பேருக்கும் நேற்று செலுத்தப்பட்டது.

ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 37 ஆயிரத்து 234 பேருக்கும் நேற்று செலுத்தப்பட்டது.

மேலும் பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 421 பேருக்கும் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 89 பேருக்கும் நேற்று செலுத்தப்பட்டது. மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் 2 ஆயிரத்து 346 பேருக்கும் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 220 பேருக்கும் நேற்று செலுத்தப்பட்டது.



காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# ஐ.நாவில் பேச அனுமதி கேட்டிருக்கும் தலிபான்




ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தில் இருக்கும் தலிபான்கள், ஐ.நா. சபையில் பேச, ஐ.நாவிடமே முறையாக அனுமதி கேட்டு கடந்த திங்கட்கிழமை கடிதம் ஒன்றை எழுதி இருக்கிறார்கள்.

தலிபான் அரசின் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தாக்கி இதை வலியுறுத்தி ஐ.நாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நியூயோர்க் நகரத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் முன்னிலையில் பேச தலிபான் அனுமதி கோரியுள்ளது. இது தொடர்பாக தலிபான் குழுவின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தை, ஐ.நாவின் கமிட்டி ஒன்று பரிசீலனை செய்து அனுமதிப்பது குறித்து தீர்மானிப்பார்கள்.

அக் கமிட்டியில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா உட்பட ஒன்பது உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என ஐ.நா சபையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறியுள்ளார். ஆனால் இக்குழு, அடுத்த திங்கட்கிழமை (செப்டெம்பர் 27) ஐ.நா சபை கூட்டங்கள் நிறைவடையும் வரை சந்திப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

எனவே அதுவரை ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகள் படி குலாம் இசக்சாயே ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நாவின் தூதராக தொடர்வார். குலாம் இசக்சாய் செப்டம்பர் 27ஆம் திகதி ஐ.நாவில் ஒரு உரையாற்றலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் தலிபான்களோ, அவரின் நோக்கம் ஆப்கானிஸ்தானை பிரதிபலிக்காது என கூறியுள்ளனர்.

மேலும், தலிபான் சுஹைல் ஷாஹீனை ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா. தூதராகவும் பரிந்துரைத்துள்ளது. முன்னாள் ஆப்கானிஸ்தான் அரசின் பிரதிநிதி, ஆப்கானின் உண்மையான பிரதிநிதி அல்ல எனவும் தலிபான்கள் கூறியுள்ளனர்

# சூடானைக் கைப்பற்ற சதித்திட்டம் 40 இராணுவ அதிகாரிகள் கைது




சூடான் அரசைக் கைப்பற்ற அந்நாட்டு இராணுவத்தின் ஒரு பிரிவினர் கிளர்ச்சியில் ஈடுபட, துரிதமாக செயல்பட்ட இராணுவத் தலைமையகம் 40 அதிகாரிகளையும் கைது செய்து சதியை முறியடித்தது.

ஆபிரிக்க கண்டத்தின் வட பகுதியில் உள்ளது சூடான். பரப்பளவு அடிப்படையில் ஆபிரிக்கக் கண்டத்திலேயே இது மிகப்பெரிய நாடு. வடக்கில் எகிப்தும், கிழக்கில் எரித்திரியாவும் அமைந்திருக்கும் சூடானில் பெரும்பாலான மக்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர்.

சூடான் நாட்டில் தற்போது இடைக்கால அரசு ஆட்சியில் உள்ளது. இந்த அரசின் பிரதமராக இருக்கிறார் அப்தல்லா ஹாம்டாக். முன்னதாக நீண்ட காலமாகவே ஒமர் அல் பஷீர் சூடான் நாட்டின் அதிபராக இருந்தார். 1989 முதல் 2019 வரை அவர் அதிபராக இருந்தார். அவர் ஆட்சியின் மீது மக்கள் அதிருப்தி கொள்ள இராணுவத் துணையுடன் மக்கள் அதிபரை ஆட்சியில் இருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் அமைந்த இடைக்கால அரசின் பிரதமரானார் அப்தல்லா ஹாம்டாக்.

இந்நிலையில், அண்மைக்காலமாகவே இடைக்கால ஆட்சிக்கு எதிராக இராணுவத்தில் ஒரு பிரிவினர் செயல்படத்தொடங்கினர். இவர்கள் அவ்வப்போது ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் ஈடுபடுகின்றனர். இந்நிலையில், இன்றும் அப்படியொரு முயற்சி நடைபெற அதனை சூடான் அரசு துரிதமாக செயல்பட்டு தடுத்துள்ளது.

இது குறித்து ரஷ்யாவின் ஸ்புட்னிக் நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், சூடான் நாட்டு நாடாளுமன்றத்தை நோக்கி இராணுவத்தின் ஒரு பிரிவினர் படையெடுக்க. இராணுவமே டாங்குகளை சாலைகளின் குறுக்கே நிறுத்தித் தடுத்தது. குறிப்பிட்ட அந்த 40 பேரும் நீண்ட காலமாகவே இராணுவத் தலைமையகத்தின் தீவிர கண்காணிப்பில் இருந்துள்ளனர். இந்நிலையில், இன்று அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட முயன்றபோது இராணுவத் தலைமையகத்தால் தடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிளர்ச்சியின் பின்னணியில் முன்னாள் அதிபர் ஒமர் அல் பஷீர் இருக்கிறார்என ஆளுங்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

# பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகத்தின் இரண்டாவது மின்னஞ்சல் தரவு கசிவு!




பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகத்தின் இரண்டாவது மின்னஞ்சல் தரவு கசிந்துள்ளதாக, தெரியவந்துள்ளது.

பிரித்தானியாவில் குடியேற தகுதியான ஆப்கானியர்களின் பாதுகாப்பை சிக்கலுக்கு உள்ளாக்கும் விதத்தில், இந்த கசிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் டசின் கணக்கிலான மக்களுக்கு தவறுதலாக ஒரு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. அதில் மின்னஞ்சல் அனுப்பப்பட்டவர்களின்பெயர்கள்எல்லோருக்கும் தெரியும் படி அனுப்பப்பட்டிருந்தது.

பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகம் இதற்கு மன்னிப்பு கேட்டு, அவர்களின் பாதுகாப்புக்கு கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன எனக் கூறியது. இந்தநிலையில் இரண்டாவது மின்னஞ்சல் தரவு கசிவும் ஏற்பட்டுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட தரவுக் கசிவு தொடர்பான விவகாரத்தில், பாதுகாப்புத் துறை சார்ந்த அதிகாரிகள் அனுப்பிய மின்னஞ்சலில், சில மின்னஞ்சல்கள் 55 நபர்களின் பெயர்களை எல்லோரும் பார்க்கும் விதத்தில் இருந்தது.

முதல் மின்னஞ்சல் தரவுக் கசிவில், பிரித்தானியாவில் குடியேற விரும்பும் 250க்கும் மேற்பட்டவர்களுக்கு தவறுதலாக இந்த மின்னஞ்சல் அனுப்பப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஒரு முழு விசாரணை தொடங்கப்பட்டிருப்பதாகவும் ஒரு அதிகாரி பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் எனவும் பிரித்தானிய பாதுகாப்புச் செயலர் பென் வாலஸ் கூறினார்.

# தலிபான்கள் ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு கல்வியை மறுக்கின்றமை இஸ்லாத்துக்கு எதிரானது



ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்வி கற்கின்றமையை தடுப்பது இஸ்லாத்துக்கு எதிரானது என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கூறியுள்ளார். பி.பி.சி. உடனான நேர்காணலில், ஆப்கானிஸ்தானில் அமைந்திருக்கும் தலிபான்கள் தலைமையிலான அரசை அங்கீகரிக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என சில நிபந்தனைகளை இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

தலிபான்களின் தலைமை அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கியதாகவும், மனித உரிமைகளை மதிப்பதாகவும் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் தீவிரவாதிகளுக்கு ஆப்கானிஸ்தான் அடைக்கலம் கொடுக்கக் கூடாது என்பதும் ஒரு நிபந்தனை.

கடந்த வாரம் தலிபான்கள் பெண் பிள்ளைகளை மேனிலைப் பள்ளிகளிலிருந்து விலக்கினார்கள். ஆண் பிள்ளைகள் மற்றும் ஆண் ஆசிரியர்கள் மட்டுமே பள்ளிக்கு வர அனுமதிக்கப்பட்டார்கள். கடந்த வாரம் தலிபான்கள் பெண் பிள்ளைகளை மேனிலைப் பள்ளிகளிலிருந்து விலக்கினார்கள். ஆண் பிள்ளைகள் மற்றும் ஆண் ஆசிரியர்கள் மட்டுமே பள்ளிக்கு வர அனுமதிக்கப்பட்டார்கள்.

தலிபான்கள், பெண்கள் பள்ளிக்குச் செல்வதை அனுமதிப்பார்களென கருதுகிறேன் என்றார். பெண்கள் கல்வி கற்கக் கூடாது என்கிற யோசனை இஸ்லாத் அல்ல. அதற்கும் மதத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என கூறியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு, மீண்டும் 1990களில் இருந்தது போன்ற ஆட்சி வந்துவிடும் என அந்நாட்டு மக்கள் மத்தியில் அச்சம் நிலவியது. அந்த காலகட்டத்தில் தலிபான் கடும்போக்குவாதிகள் மிகக் கடுமையாக பெண்களுக்கான உரிமைகளை மறுத்தனர்.

தற்போது தலிபான்கள் அதிகாரத்துக்கு வந்த பிறகு கூட, இஸ்லாமிய சட்டங்களுக்கு உட்பட்டு பெண்களுக்கான உரிமைகள் மதிக்கப்படும் என கூறியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் ஆப்கனில் பெண் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லக் கூடாது என்கிற தலிபான்களின் தீர்மானம், சர்வதேச அளவில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அதன் பிறகு தலிபான் செய்தித் தொடர்பாளர் ஒருவர், பெண்கள் கூடிய விரைவில் பள்ளிக்குத் திரும்பலாம் என கூறினார். பெண்கள் எப்போது பள்ளிக்குத் திரும்ப முடியும், அப்படியே பள்ளிக்குச் சென்றாலும் அவர்களுக்கு என்ன மாதிரியான கல்வி போதிக்கப்படும் என்பது குறித்த தெளிவான விவரங்கள் இல்லை. சர்வதேச சமூகம் தலிபான்களுக்கு கூடுதல் சமயம் கொடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார் இம்ரான் கான். ஜிஹாத் கடும்போக்குவாதத்துக்கு எதிரான வலுவான கூட்டாளியாக பாகிஸ்தான் பார்க்கப்படவில்லை. அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளும் பாகிஸ்தான் தலிபான்களுக்கு உதவி வருவதாக குற்றம்சாட்டி வருகிறது, அதை பாகிஸ்தானும் தொடர்ந்து மறுத்து வருகிறது.

ஆப்கானிஸ்தானில் திட்டமிடப்பட்ட 9/11 தாக்குதலுக்குப் பிறகு, தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் தன்னை அமெரிக்காவின் கூட்டாளியாக நிலை நிறுத்திக் கொண்டது.

ஆனால் அதே நேரத்தில், பாகிஸ்தானின் இராணுவம் மற்றும் உளவு அமைப்புகளின் ஒரு பகுதி, தலிபான் போன்ற இஸ்லாமிய கடும்போக்கு அமைப்புகளோடு தொடர்பில் இருந்தது.

தாலிபன் தலைமையிலான அரசாங்கத்தை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதா வேண்டாமா என்பதை பாகிஸ்தான் மற்ற நாடுகளோடு இணைந்து தீர்மானிக்கும் என்று கூறியுள்ளார் இம்ரான் கான். அனைத்து அண்டை நாடுகளும் ஒன்றாக இணைந்து, தலிபான்கள் எப்படி செயல்படுகிறார்களென்று பார்ப்போம் என கூறியுள்ளார். தலிபான்களை அங்கீகரிப்பதும் நிராகரிப்பதும் ஒரு கூட்டுத் தீர்மானமாக இருக்கும் என்று கூறினார் இம்ரான் கான்.



# சமத்துவத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரான உயிர்க்கொல்லி 'நீட்' என கமல் விமர்சனம்

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீட் ஓர் உயிர்க்கொல்லித் தேர்வு என்பதை உரக்கச் சொல்கிறது நீதிபதி ஏ.கே.ராஜன் குழுவின் அறிக்கை. நீட் தேர்வின் பாதிப்புகளை ஆராய நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை, இந்தத் தேர்வின் விளைவுகளைப் பட்டியலிடுகிறது. அதன்படி, கிராமப்புற ஏழை மாணவர்கள், தமிழ் வழியில் பயின்றோர் மருத்துவராகும் கனவை இத்தேர்வு சிதைக்கிறது. நீட் தேர்வுக்கு பின் மருத்துவப் படிப்பில் சேர்ந்த தமிழ் வழியில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 14.44 சதவீதத்திலிருந்து வெறும் 1.7 சதவீதமாகச் சரிந்துள்ளது. இது சமத்துவத்திற்கும் சமூகநீதிக்கும் எதிரான தேர்வு என்பதற்கு இந்த ஒரு புள்ளி விவரமே போதுமானது.

நீட் தேர்வுக்குப் பிறகு எம்.பி.பி.எஸ். படிப்பில் சி.பி.எஸ்.இ. மற்றும் ஆங்கில வழியில் படித்த மாணவர்கள்தான் அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளனர். நீட் தேர்வில் மருத்துவப் படிப்பில் சேர்ந்தவர்களில் 90% தனியார் கோச்சிங் சென்டர்களில் பயிற்சி பெற்றவர்கள். நீட் தேர்வின் பின்னால் இருப்பது வணிக நோக்கம்தான் என்பது, நான் ஆரம்பம் முதலே சொல்லிவரும் ஒன்று.

இந்தப் புள்ளிவிவரங்கள் அதை உறுதி செய்கின்றன. நாட்டிலேயே சிறந்த மருத்துவக் கட்டமைப்பைக் கொண்டிருப்பது தமிழகம். இந்தத் தேர்வு நீடிக்குமானால் தமிழகத்தின் மருத்துவக் கட்டமைப்பு சிதையும். நீட் தேர்வு அறிமுகமான பிறகு, தமிழ் வழியில் மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி நிகழ்ந்துள்ளது. உலகம் முழுக்க தாய்மொழிக் கல்வி ஊக்குவிக்கப்பட்டு வரும் சூழலில், நீட் தேர்வு தாய்மொழிக் கல்விக்கு எதிரான மனோநிலையை வளர்க்கிறது. நகர்ப்புறத்தில் பிறந்த பண வசதி படைத்தவர்கள் மட்டுமே மருத்துவராகும் வாய்ப்பினை உருவாக்கும் இந்த அறமற்ற உயிர்க்கொல்லித் தேர்வினை தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, இந்தியாவிலிருந்தே விரட்டியடிக்கவேண்டும்.

உண்மைகளைவெளிக்கொணர்ந்து சட்டப் போராட்டத்திற்கான வழிவகைகளையும் ஆராய்ந்து சொன்ன ஏ.கே.ராஜன் தலைமையிலான குழுவினருக்கு மக்கள் நீதி மய்யம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி விரைவில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# உரிமைகளுக்காக போராடுபவர்களுடன் துணை நிற்பேன் என்கிறார் ராகுல்



உரிமைகளுக்காகவும், சுய மரியாதைக் காகவும் போராடுபவர்களுடன் நான் துணை நிற்பேன் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், வயநாடு தொகுதி எம்.பியுமான ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

ராகுல்காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'மோடி அரசு அவர்களது நண்பர்களுடன் உள்ளது. ஆனால், உரிமைகளுக்காகவும் சுயமரியாதைக்காகவும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபடும் விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்களுக்கு துணையாக நாடு இருக்கும். இந்த நாட்டுடன் நானும் துணைநிற்பேன். நான் இப்பொழுதும் எப்பொழுதும் நாட்டுடன் இருப்பேன்' என தெரிவித்துள்ளார்.



# 300 நாள்களைக் கடந்து தொடரும் டெல்லி விவசாயிகள் போராட்டம்

இந்திய மத்திய அரசின் வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லியில் விவசாயிகள் மேற்கொண்டு வரும் போராட்டம் 300 நாள்களைக் கடந்துள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்த 3 புதிய வேளாண் சட்டங்களை ரத்துச் செய்யுமாறு, நாடு முழுவதும் பல்வேறு மாநில விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லியில் மேற்கொண்டுள்ள போராட்டம் நேற்றுடன் 300 நாள்களை நிறைவு செய்துள்ளது.

இதுபற்றி சம்யுக்த கிசான் மோர்ச்சா அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்லி எல்லையில் லட்சக்கணக்கான விவசாயிகள் அமைதியாக நடத்திவரும் அறப்போர் 300 நாள்களைக் கடந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் கோரிக்கை தெளிவாகத் தெரிந்தாலும் மத்திய அரசு அவற்றை ஏற்க மறுப்பதாகக் குறிப்பிட்டுள்ள அந்த அமைப்பு, கோரிக்கைகளை ஏற்கும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளது.

மேலும், வரும் 27 ஆம் திகதி நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தைநடத்த இருப்பதாகவும் சம்யுக்த கிசான் மோர்ச்சா அமைப்பு தெரிவித்துள்ளது.



# திருப்பதி ஏழுமலையானை வழிபடுவதற்கு 2 டோஸ் கொரோனாத் தடுப்பூசி அவசியம்

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் விதமாக திருப்பதி ஏழுமலையானை வழிபடுவதற்காக திருப்பதி மலைக்கு வரும் பக்தர்கள் இனிமேல் 2 டோஸ் கொரோனாத் தடுப்பூசிகளையும் போட்டுக் கொண்டதற்கான சான்றிதழ் அல்லது கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் கொண்டு வரவேண்டும் என திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது. கொரோனா பரவல் காரணமாக கடந்த மே மாதம் முதல் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் இலவச தரிசனம் நிறுத்தி வைக்கப்பட்டது. தொற்று குறைந்து வருவதையடுத்து, கடந்த 8ஆம் திகதி முதல் சித்தூர் மாவட்ட மக்களுக்கு மட்டும் நாள்தோறும் 2,000 பேருக்கு இலவச தரிசனத்திற்கான டோக்கன்கள் வழங்கப்பட்டு சாமி தரிசனத்திற்கு உள்ளூர் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

படிப்படியாக தொற்று குறைந்து வருவதால், கடந்த 20 ஆம் முதல் அனைத்து பக்தர்களுக்கும் இலவச தரிசனத்திற்கான டோக்கன்களை 8,000 ஆக உயர்த்தி திருப்பதி பேருந்து நிலையம் அருகே உள்ள சீனிவாசம் வளாகத்தில் டோக்கன்கள் வழங்கப்பட்டு வந்தன. புரட்டாதி மாதம் என்பதால் பக்தர்களின் கூட்டம் அதிகரித்து, அதிகாலையில் வழங்கப்பட வேண்டிய இலவச தரிசன டோக்கன்களுக்காக இரவு முழுவதும் தங்கி வருவதால் கொரோனா பரவல் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டதால், 300 ரூபா சிறப்பு தரிசன டோக்கன்களைப் போல, இலவச தரிசன டோக்கன்களையும் இணைய வழியிலேயே வழங்க தேவஸ்தானம் முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து திருப்பதி தேவஸ்தானம் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், திருப்பதிக்கு வரும் பக்தர்கள் இனிமேல் 2 டோஸ் கொரோனாத் தடுப்பூசிகளைப் போட்டுக் கொண்டதற்கான சான்றிதழ்கள் அல்லது கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் கொண்டு வரவேண்டும் என அறிவித்துள்ளது. வரும் 25 ஆம் திகதி முதல் இலவச தரிசன டோக்கன்களை இணையம் மூலம் பக்தர்களுக்கு வழங்க தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது. செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை ஏழுமலையானை இலவசமாகத் தரிசிக்கும் வகையில் இலவச தரிசன டோக்கன்கள் இணைய வழியில் வழங்கப்படும் எனவும், இதன் காரணமாக இம்மாதம் 26 ஆம் திகதி முதல் திருப்பதியில் உள்ள சீனிவாசம் கட்டட வளாகத்தில் செயல்படும் இலவச தரிசன கவுண்டர் மூடப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

# இந்தியர்கள் 2 டோஸ்களைச் செலுத்தினாலும் பிரிட்டனில் 10 நாள்கள் தனிமைப்படுத்தல்

இந்தியாவில் வழங்கப்படும் கொரோனாத் தடுப்பூசி சான்றிதழ்களை ஏற்க பிரிட்டன் அரசு மறுக்கும் நிலையில், பதிலடியாக பிரிட்டன் நாட்டைச் சேர்ந்தவர்கள் 2 தடுப்பூசி போட்டிருந்தாலும் இந்தியாவில் பத்து நாள் தனிமைப்படுத்துதல் கட்டாயம் என வலியுறுத்த இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்தியர்கள் 2 தடுப்பூசிகள் செலுத்திக் கொண்டு அந்த சான்றிதழுடன் பிரிட்டனுக்கு பயணம் செய்தாலும் அவர்கள் கட்டாயம் 10 நாள்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இரண்டு முறை கொரோனா பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் எனவும் அண்மையில் பிரிட்டன் அரசு உத்தரவிட்டது. பிரிட்டனின் இந்த அறிவிப்புக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இந்தியாவில் அளிக்கப்படும் தடுப்பூசிகளுக்கு பிரிட்டிஷ் அரசு அங்கீகாரம் அளிக்காதது இந்தியாவுக்கு எதிரான செயல் என எதிர்ப்பு வலுத்து வருகிறது. பிரிட்டனில் உருவாக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியே இந்தியாவில் அதிகம் பயன்படுத்தப்படும் நிலையில், அதனை அந்நாடு அங்கீகரிக்க மறுப்பது ஏன் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. பிரிட்டன் அரசின் புதிய கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து எம்.பியும், முன்னாள் மத்திய அமைச்சருமான சசி தரூர் தனது பிரிட்டன் பயணத்தை ரத்துச் செய்துள்ளார். பிரிட் டனின் கொள்கையை எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான ஜெய்ராம் ரமேஷும் கண்டித்துள்ளார். இந்தச் சூழலில் ஐ.நா. மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அங்கு பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் எலிசபெத் ட்ருஸ் உள்ளிட்டோரை சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, தடுப்பூசி சான்றிதழ் விவகாரம் முக்கிய இடம் பிடித்ததாகவும், 2 தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டு அந்த சான்றுடன் பிரிட்டன் வருவோருக்கு தனிமைப்படுத்தலில் இருந்து விலக்கு அளிக்க வலியுறுத்தியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்திய சான்றிதழ்களை அங்கீகரிக்க பிரிட்டிஷ் அரசு தொடர்ந்து மறுத்தால், பதிலடியாக பிரிட்டன் பயணிகளுக்கு 10 நாள் தனிமைப்படுத்துதல் கட்டாயம் என்று வலியுறுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.



# 49 இந்து ஆலயங்களுக்கு 49 லட்சம் ரூபா நிதி உதவி

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் பிரதமரும் புத்தசாசன மத விவகார மற்றும் கலாசார அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கென நிதியுதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வு கொவிட் 19 சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அம் பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் தலைமையில் திருக் கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்று இருந்தது.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 49 இந்து ஆலயங்களுக்கு சுமார் 49 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

அந்தவகையில் ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கான நிதியுதவி திருக்கோவில் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன், திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே.சதீசேகரன், மாவட்ட பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இந்து ஆலயங்களின் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர் .

இங்கு உரையாற்றிய அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கடந்த ஆண்டு முதல் உலகம் முழுவதும் கொவிட் 19 காரணமாக பாதிக்கப்பட்டு உள்ள நிலையில் இலங்கை அரசு பல சவால்களை எதிர்கொண்ட போதும் பிரதமர் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கு நிதியுதவி வழங்கி வைத்தமையையிட்டு இந்து ஆலயங்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் எனவும் தெரிவித்து இருந்தார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு நால்வர் திருமலையில் கைது





திருகோணமலை – அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு சந்தேகநபர்கள் இன்று (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் நான்கு டிராக்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என அக்போபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் மற்றும் அக்போபுர பகுதியைச் சேர்ந்த 23, 27, 33 மற்றும் 30 வயதுடைய நால்வரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்போபுர சீனி ஆலை நான்காவது வலயத்தில் சந்தேகநபர்கள் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட போது விசேட பொலிஸ் அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சூரியபுர விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சிக்கியுள்ளனர்.

சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை கந்தளாய் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# திருமலை வைத்தியசாலை கட்டடம் மரம் வீழ்ந்து சேதம்

நேற்று இரவு பெய்த கடும் மழையின் காரணமாக திருகோணமலை வைத்தியசாலையின் வளாகத்தில் நின்ற வேம்பு மரம் சரிந்து வீழ்ந்ததில் வைத்தியசாலையின் நடைபாதைக் கட்டடம் முற்றாக சேதமடைந்துள்ளது.

அதிஷ்டவசமாக எந்த உயிர்களுக்கும் சேதம் ஏற்படவில்லை. இதன்போது கட்டடத்தின் கட்டுமானத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் வெளிவந்துள்ளது. குறிப்பாக தூண்கள் எவையும் கம்பி வைக்காமலேயே கட்டப்பட்டுள்ளமையும் மேலும் பல முறையற்ற கட்டுமானங்களும் வெளிவந்துள்ளன.

# கல்முனையில் வாள்வெட்டு இளைஞர் வைத்தியசாலையில்

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை மதரஸா வீதியில் இடம்பெற்ற சரமாரியான வாள்வெட்டில் காயமடைந்த கல்முனை இளைஞர் அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை பயணத்தடை அமுலில் உள்ள காலப்பகுதியில் தன்னுடைய வீட்டுக்கு முன்னால் வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்திச்சென்றவர்களை நிறுத்தி வேகமாக வாகனத்தை ஓட்டவேண்டாம் என்று கூறி அவர்களுடன் வாய்தர்க்கத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் பின்னர் கலைந்து சென்று, இரு வாள்களுடன் வந்து சரமாரியாக தாக்கியதில் காயமடைந்த 19 வயதான முஹம்மத் ஸபான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என காயமடைந்த ஸபானின் தந்தை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படும் கல்முனை பிராந்தியத்தில் இப்படியான சம்பவங்கள் அதிகரித்து வருவது ஆபத்தை உண்டாக்கும்.

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த எனது தம்பி சத்தம் கேட்டு வெளியே வந்தபோது மிக நீளமான வாள்களால் தாக்கப்பட்டார். இது தொடர்பில் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம். எனது தம்பியை தாக்கியவர்களை எங்களுக்கு நன்றாக தெரியும். எங்களின் பிரதேசத்தில் யாரிடம் விசாரித்தாலும் அவர்களின் கொடுமைகளை விளக்குவார்கள் என தாக்கப்பட்ட ஸபானின் சகோதரி ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

வீட்டு வாசல் கதவு, வீட்டு கதவு போன்றவற்றில் வெட்டுத் தடயங்கள் உள்ளதையும், இரத்த தடயங்கள் உள்ளதையும் அவதானிக்க முடிவதுடன் காணொலியில் மிக கோபத்துடன் குறித்த இரு இளைஞர்களும் தாக்குதல் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பிலான மேலதிக விசாரணையை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் தடுப்பூசி இன்றும் ஏற்றப்பட்டது

மட்டக்களப்பு கூழாவடி விக்னேஸ்வரா திருத்தொண்டர் மண்டபத்தில் இன்றைய தினம் (23) 20வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபைக் குட்பட்ட புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்,மட்டக்கள்பபு இந்துக்கல்லூரி,கல்லடி சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பகுதிகளிலும் 20வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.



# ஹைதராபாத்தை வீழ்த்தியது டெல்லி புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடம்




ஐ.பி.எல். தொடரின் 33 ஆவது லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி, சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

டுபாயில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைசஸ் ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. அப்துல் சமத் 28 ஓட்டங்களையும் ரஷிட் கான் 22 ஓட்டங்களையும் எடுத்தனர். டெல்லி அணியின் ரபாடா 3 விக்கெட்டுகளையும் ஹென்ரிச் நோட்ஜே மற்றும் அக்ஸர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய டெல்லி கப்பிட்டல்ஸ் அணி, 17.5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிபெற்றது. ஸ்ரேயஸ் ஐயர் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் ஷிகர் தவான் 42 ஓட்டங்களையும் ரிஷப் பண்ட் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் எடுத்தனர். ஹைதராபாத் அணியின் கலீல் அஹமட் மற்றும் ரஷிட் கான் இருவரும் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தியிருந்தனர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக டெல்லி அணியின் ஹென்ரிச் நோட்ஜே தெரிவுசெய்யப் பட்டார்.

இந்தப் போட்டியின் வெற்றியோடு மொத்தமாக 14 புள்ளிகளைப் பெற்று புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி நீடிக்கிறது.





# இலங்கையின் உள்நாட்டு லீக் கிரிக்கெட் தொடர் ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகும்

இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தளர்த்தப்படவிருக்கும் நிலையில், உள்நாட்டு லீக் கிரிக்கெட் தொடரை ஆரம்பிப்பது தொடர்பான அறிவித்தலை இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ளது. தொடரில் பங்கேற்கும் அணிகளுக்கு இலங்கை கிரிக்கெட் சபை மின்னஞ்சல் மூலமாக ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதியினை உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிப்பதற்கான திட்டமிடல் திகதியாக அறிவித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் 07ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த இலங்கையின் உள்ளூர் கிரிக்கெட் போட்டித் தொடர், கடந்த ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி கொவிட்-19 வைரஸ் தாக்கம் அதிகரித்ததனையடுத்து தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டதனால் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கம் வழங்கும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இலங்கையின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் என இலங்கை கிரிக்கெட் சபை அனுப்பியுள்ள மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் ரி-20 லீக் தொடரை ஆரம்பித்து விட்டு, பின்னர் முதல்தரப் போட்டிகளை நடத்துவது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் போட்டிகளில் பங்குபற்றக்கூடிய வீரர்கள் அனைவரும் கொவிட்-19 வைரஸிற்கான தடுப்பூசிகளைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் தகவல் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆரம்பமாகவிருக்கும் இலங்கையின் உள்ளூர் போட்டிகள் அனைத்தும் இலங்கையின் புதிய உள்ளூர் கிரிக்கெட் கட்டமைப்பின் வரையறைகளைப் பின்பற்றி நடக்கவிருப்பதனால் இந்த பருகாலத்திற்கான உள்ளூர் முதல்தர கிரிக்கெட் போட்டிகள் இலங்கையின் கிரிக்கெட் வீரர்களுக்கு முக்கியத்துவமிக்கதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பஞ்சாப் கிங்ஸின் தீபக் ஹூடாவுக்கு சூதாட்டத்தில் தொடர்பு இருக்கிறதா?

## சர்ச்சையான இன்ஸ்டா பதிவு குறித்து அதிகாரிகள் விசாரணை

தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் போட்டி ஆரம்பிக்கும் முன்னர் பஞ்சாப் கிங்ஸ் வீரர் தீபக் ஹூடா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்ட பதிவொன்று அவருக்குச் சிக்கலை ஏற்படுத் தியுள்ளது. இதனால் அவர் மீது சூதாட்டப் புகாரும் எழுந்துள்ளது.

தற்போது மீள ஆரம்பமாகியிருக்கும் ஐ.பி.எல். தொடரின் லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் பந்து வீச்சாளர் கார்த்திக் தியாகியின் அபார பந்துவீச்சின் காரணமாக பஞ்சாப் அணி தோல்வியடைந்தது. இந்தப்போட்டி தொடங்குவதற்கு முன்பு பிற்பகல் 2 மணியளவில் பஞ்சாப் வீரர் தீபக் ஹூடா இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டார். அதில், ஹெல்மட் அணிவது போன்ற படத்தைப் பகிர்ந்து, நாங்கள் தயார் என தெரிவித்து தானும் அந்தப்போட்டியில் களமிறங்கவுள்ளேன் என்பதை மறைமுகமாகத் தெரிவித்தார்.




இதுதான் தற்போது அவருக்குப் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது. ஐ.பி.எல். விதிமுறைப்படி ஒரு வீரர் போட்டி தொடர் பாகவோ, விளையாடவிருக்கும் 11 வீரர்கள் குறித்தோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சமூக வலைத்தளங்களில் பதிவிடக் கூடாது. விளையாடும் 11 பேர் கொண்ட அணியில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதை பொது வெளியில் தெரிவிப்பதன் மூலம் சூதாட்டக்காரர்களுக்கும், தரகர்களுக்கும் சமிக்ஞை கொடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதே இதன் அடிப்படையாகும்.

இதனால் தீபக் ஹூடாவுக்கும் சூதாட்டத் தரப்புக்கும் தொடர்பு இருக்கிறதா? என்பதையும் சூதாட்டத் தரகர்களுக்கு மறைமுகமாக தீபக் ஹூடா சமிக்ஞை கொடுத்தாரா என்பது குறித்தும் ஐ.பி.எல். சூதாட்டத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் விசாரணை செய்துவருகின்றனர்.

விதிமுறைப்படி தீபக் ஹூடா, அன்று விளையாடவிருந்த அணியில் தான் இருக்கிறேன் என மறைமுகமாக அறிவித்தது தவறு என்பதால், அவருக்கு கிரிக்கெட் சூதாட்டத்தோடு தொடர்பு இருக்கிறதோ இல்லையோ குறைந்தபட்ச தண்டனையாவது கிடைக்கும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பயிற்சியாளரை விட்டுப் பிரிகிறேன் என்கிறார் சிமோனா ஹாலெப்

ருமேனிய நாட்டைச் சேர்ந்த உலகின் முன்னாள் ‘நம்பர் வன்’ டென்னிஸ் வீராங்கனையான சிமோனா ஹாலெப் தனது பயிற்சியாளர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டரன் காஹில்லை விட்டுப்பிரிகிறேன் என அறிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், ‘காஹில் உடனான 6 ஆண்டு கால பயிற்சிக் காலம் அற்புதமானது.

அவருடன் இணைந்து பணியாற்றுவதை முடிவுக்குக் கொண்டு வர இதுவே சரியான நேரம் என்று கருதுகிறேன். என்னை சிறந்த டென்னிஸ் வீராங்கனையாக உருவாக்கிய அவருக்கு நன்றி’ என்று தெரிவித்துள்ளார்.

டரன் காஹிலின் பயிற்சியின் கீழ் 2018 ஆம் ஆண்டில் பிரெஞ்ச் ஓபன் தொடரில் தனது முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றிய 29 வயதான ஹாலெப், டென்னிஸில் நம்பர் வன் இடத்தையும் பிடித்தார்.

அண்மையில் இவர் அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் நான்காவது சுற்றில் தோல்வியடைந்து வெளியேறினார். கடந்த வாரம் மசிடோனியாவைச் சேர்ந்த தொழிலதிபர் டோனி லூருக் என்பவரை சிமோனா ஹாலெப் திருமணம் செய்து கொண்டமை குறிப்பித்தக்கது.



# நல்லாட்சியில் மருந்துகளை கொள்வனவு செய்த தரவுகளே காணாமற்போயுள்ளன

## ராஜித எம்.பி. காட்டம்



மருந்து மாபியா எமது காலத்தில் இடம்பெறவில்லை. நுகர்வோருக்கு அத்தியாவசியமான அனைத்து வகையான மருந்துப் பொருள்களின் விலையைக் குறைத்து நிவாரணம் வழங்குவதற்கு நாங்களே நடவடிக்கை எடுத்தோம்.

அத்துடன் 2015 முதல் 2019 வரையான காலத்தில் மருந்துப் பொருள்களை பாரிய விலைக்குக் கொள்வனவு செய்திருப்பதாகத் தெரிவித்து மருந்து சம்பந்தமான இராஜாங்க அமைச்சர் சபையை பிழையாக வழிநடத்தி இருக்கின்றார் என எதிர்க்கட்சி உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் காணாமல் போயிருக்கும் அல்லது அழிக்கப்பட்டிருக்கும் தரவுகளில் அதிகமானவை 2015 முதல் 2019 வரையான காலத்தில் மருந்து கொள்வனவு செய்த தரவுகளே காணாமல் போயிருக்கின்றன எனவும், எமது காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருள்கள் அதிக விலைக்கே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன சபையில் அறிவித்திருந்தார்.

அத்துடன் அந்த மருந்து பொருள்களை மிகவும் விலை குறைந்தளவிலேயே இந்த அரசாங்கம் கொள்வனவு செய்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் எமது காலத்தில் அதிக விலைக்கு கொண்டுவரப்பட்ட மருந்துப் பொருள்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும்போதே தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தரவுகள் காணாமல் போயிருக்கின்றன எனவும் அவர் குற்றம் சுமத்தி இருந்தார்.

எமது காலத்தில் கொண்டுவந்த மருந்துப் பொருள்கள் தொடர்பான தரவுகள் எதுவும் அழிக்கப்படவும் இல்லை. காணாமல் போகவும் இல்லை. அது அங்கு பாதுகாப்பாக இருப்பதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் எமது நல்லாட்சி காலத்தில் நான் சுகாதார அமைச்சராக இருந்து 48 வகையான மருந்து வகைகளுக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்ததால் நுகர்வோருக்கு 440 கோடி ரூபா இலாபம் கிடைத்தது.

அதேபோன்று மக்கள் அதிகம் பாவிக்கும் அனைத்துவகையான மருந்துப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

மேலும் புற்றுநோயாளிக்கு கடந்த அரசாங்க காலத்தில் 15 லட்சம் ரூபா வரையே மருந்துக்கு செலவழிக்க வரையறை இருந்தது. அதனை நாங்கள் நீக்கி நோயாளி குணமடையும் வரை தேவையான மருந்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

சேனக பிபிலேயின் மருந்து கொள்கையை பயன்படுத்தியே இதனைச் செய்தோம். அதனால்தான் மக்களுக்கு குறைந்த விலைக்கு மருந்து பெற்றுக் கொடுக்க முடியுமாகியது. இவ்வாறு மக் களுக்கு மருந்து நிவாரணம் பெற்றுக் கொடுத்த எங்களை மருந்தினை மாபியா செய்ததாக குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே நாங்கள் கொள்வனவு செய்த மருந்துப் பொருள்களின் தரவுகள் அனைத்தும் இருக்கின்றன. ஆனால் இந்த அரசாங்கத்தில் கொவிட் பரிசோதனைக்காக கொண்டுவரப்பட்ட அன்டிஜன் தொகுதிகள் தொடர்பான தரவுகளே காணாமல் போயிருக்கின்றன.

அத்துடன் இராஜாங்க அமைச்சர் மருந்து தொடர்பில் எந்த தெளிவும் இல்லாமல் சபைக்கு பொய் தகவல்களை வெளியிட்டு சபையைத் தவறாக வழிநடத்தி இருக்கின்றார் என எதிர்க்கட்சி உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

## வெலே சுதாவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல அனுமதி



பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'வெலே சுதா' எனப்படும் கம்பொல விதானகே சமந்த குமாரவை, வைத்திய சிகிச்சைகளுக்காக பூஸா சிறைச்சாலைக்கு வெளியில் அழைத்துச் செல்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) அனுமதியளித்து உத்தரவு பிறப்பித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி சோபித்த ராஜகருணா தலைமையிலான நீதிபதி தம்மிக கனேபொல அடங்கிய இருவர் கொண்ட நீதிபதிகள் குழாம் இந்த அனுமதியை வழங்கியது.

போதைப்பொருள் வர்த்தக குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது பூஸா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனை, விசாரணை எனும் பெயரில் வெளியே அழைத்து சென்று கொலை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக கூறி வெலே சுதாவின் தாய் ஆர். ஜி. மாலனி ரிட் மனுவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

தற்போது பூஸா சிறையில் உள்ள வெலே சுதாவை, மீள பொலிஸ் பொறுப்பில் எடுக்க தடை விதிக்கக் கோரி அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அண்மையில் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்ட கொஸ்கொட தாரக, ஊரு ஜீவாஆகியோர்பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சம்பவங்களை முன்வைத்து அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

குறித்த மனுவில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், பூஸா சிறைச்சாலை அத்தியட்சகர், பொலிஸ் மா அதிபர், சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

குறித்த மனு கடந்த மே 14 ஆம் திகதி அவசர மனுவாக கருதி பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது வெலே சுதாவை பூஸா சிறைக்கு வெளியே அழைத்து செல்லக் கூடாது என பூஸா சிறைச்சாலையின் அத்தியட்சகருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்நிலையில் நேற்று இந்த மனு நகர்த்தல் பத்திரம் ஊடாக மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, வெலேசுதாவை பூஸா சிறைக்கு வெளியே அழைத்து செல்லக் கூடாது என்ற நீதிமன்ற கட்டளை ஊடாக அவருக்கு சிகிச்சையளிப்பது தொடர்பிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என மனுதாரர் சுட்டிக்காட்டினார். எனவே அந்த உத்தரவு தொடர்பில் விளக்கம் ஒன்றை பெற்றுத் தருமாறு மனுதாரர் கோரினார்.

இந்நிலையில் விடயத்தை ஆராய்ந்த நீதிமன்றம், ஏற்கனவே மேன் முறையீட்டு நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு, வெலே சுதாவை வைத்திய சிகிச்சைகளுக்காக அழைத்து செல்லத் தடையாக அமையாது என விளக்கமளித்து வழக்கை ஒக்ரோபர் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான வழக்கு; ஆட்சேபனை முன்வைக்க கால அவகாசம்



முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்ட முடிவை செல்லுபடியற்றது என அறிவிக்கக் கோரியும் அவரைக் கைது செய்து விசாரணை செய்ய பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டளை நீதிப் பிரேரணை மனு தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை முன் வைக்க பிரதிவாதிகளுக்கு அனு மதியளிக்கப்பட்டுள்ளது.

தெற்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த குறித்த மனு மீதான பரிசீலனைகள் நேற்று (புதன்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிககனே பொல ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட போதே இதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டது.

மேற்படி மனு நேற்றுபரிசீலனைக்கு வந்த போது, பிரதிவாதி அஜித் நிவாட் கப்ரால் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, தனக்குசெவ்வாய்க்கிழமை இரவே மனுக்கள் தொடர்பிலான ஆவணங்கள் கிடைத்தமையால் அவற்றை ஆராய கால அவகாசம் தேவை எனக் கோரினார். எனவே அவற்றை ஆராய்ந்து, மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை முன்வைக்க அனுமதிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## உலக பிரசித்தி பெற்ற மூலிகை மருத்துவர் எலியந்த வைட் கொரோனாவால் சாவு





உலக பிரசித்தி பெற்ற மூலிகை மருத்துவர் எலியந்த வைட் கொரோனா வைரஸ் தொற் றால் நேற்று (புதன்கிழமை) உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, லசித் மாலிங்க, சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்ட முக்கிய நபர்களுக்கு பண்டைய கால மருத்துவ முறைகள் மூலம் நோய்களையும் உபாதைகளையும் குணப்படுத்தியவர் ஆவார்.

கொரோனா வைரஸ் தொற்றால் ஒரு வார காலம் பாதிக்கப்பட்டு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட வேளையில் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2021இல் வெளியிடப்பெற்றது.